**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி, B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 15 ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**இ.ம.எண். 195/2021**
**இல்**
**அசல் வழக்கு எண். 44/2020**

உக்கம்ராஜ் .. மனுதாரர்/ வாதி

//எதிர்//

பாஹிமா வகையறா ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 22.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சங்கரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன், அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 31.07.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுவானது ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்று ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர், இ.ம. எண். 195/2021 மனுவிலும் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 3ம் நபர் ஆவார். வழக்கிடை சொத்தினை தான் 01.12.2012ந் தேதி முகமது யூசுப் ராவுத்தர் குமாரர் அப்துல் வஹாப் அவர்களிடமிருந்து ஆவண எண்.187/2012 ன் கீழ் கிரயம் பெற்று தன் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருவதால் மேற்படி வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் இருந்து வருவதாகவும், தற்போது தான் தனது கட்சியை வலுப்படுத்தக்கூடிய வகையில் சில முக்கிய ஆவணங்களை தாக்கல்

செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவையான, அவசியமான ஆவணங்கள் என்றும், மேலும் அது வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும், எனவே, ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்று ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கோரி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்தானது வாதியின் தகப்பனாரான அப்துல் வஹாப்பிற்கு அவருடைய குடும்பத்தில் கடந்த 28.05.1976 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி அப்துல் வஹாப்பிற்கு டி ஷெடியூல் சொத்தாக சர்வே எண் 66–1ஏ ல் வீட்டின் தென்புறம் பாதிவீடும் சி ஷெடியூல் சொத்தாக அப்துல் ஹமீது என்பவருக்கு சர்வே எண் 66–1ஏ –ல் வீட்டின் வடபுறம் பாதி வீடும் அப்துல் ஹமீது தனக்கு கிடைத்த சி ஷெடியூல் சொத்தினை வாதியின் தகப்பனாருக்கு ஹிபா மூலம் கொடுத்துவிட்டதாகவும், வாதியின் தகப்பனார் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 11.04.2014 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் இறந்த பிறகு வாதிக்கு கொடுக்க வேண்டிய பாக வீதத்தினை கொடுக்காமல் வாதியின் தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் கூட்டாக அனுபவித்து வந்ததால் வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு எண். 4/2016 மற்றும் மேல்முறையீட்டு எண் 28/2016 ஆகிய இரு வழக்கிலும் கூறப்பட்டுள்ள புல எண்கள் 66/1ஏ என்பதாகும். ஆனால் இம்மனுதாரர் கிரயம் பெற்றதாக சொல்லப்படுவது 66/1 டி ஆகும். புல எண் 66/1 டி என்பது பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ மற்றும் பி ஷெடியூல்தாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனரான அப்துல் வஹாப்பிற்கு புல எண் 66–1டி ஒதுக்கப்படவில்லை. 28.05.1976 குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி புல எண்.66/1A சொத்து மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் புதிதாக வழக்கு தாக்கல் செய்து தனக்குள்ள பரிகாரத்தை தேடிகொள்ளலாமே தவிர இவ்வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க கோரி மனுதாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என கூறப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் என்றும், வழக்கிடை சொத்தினை மனுதாரர் 01.12.2012ந் தேதி முகமது யூசுப் ராவுத்தர் குமாரர் அப்துல் வஹாப் அவர்களிடமிருந்து ஆவண எண்.187/2012 ன் கீழ் கிரயம் பெற்று தன் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருவதால் மேற்படி வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் இருந்து வருவதாகவும், தற்போது மனுதாரர் தனது கட்சியை வலுப்படுத்தக்கூடிய வகையில் சில முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவையான, அவசியமான ஆவணங்கள் என்றும், மேலும் அது வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும், எனவே, ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்று ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்தானது வாதியின் தகப்பனாரான அப்துல் வஹாப்பிற்கு அவருடைய குடும்பத்தில் கடந்த 28.05.1976 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி அப்துல் வஹாப்பிற்கு டி ஷெடியூல் சொத்தாக சர்வே எண் 66 1ஏ ல் வீட்டின் தென்புறம் பாதிவீடும் சி ஷெடியூல் சொத்தாக அப்துல் ஹமீது என்பவருக்கு சர்வே எண் 66 1ஏ –ல் வீட்டின் வடபுறம் பாதி வீடும் அப்துல் ஹமீது தனக்கு கிடைத்த சி ஷெடியூல் சொத்தினை வாதியின் தகப்பனாருக்கு ஹிபா மூலம் கொடுத்துவிட்டதாகவும், வாதியின் தகப்பனார் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 11.04.2014 அன்று இறந்துவிட்டதாகவும், அவர் இறந்த பிறகு வாதிக்கு கொடுக்க வேண்டிய பாக வீதத்தினை கொடுக்காமல் வாதியின் தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் கூட்டாக அனுபவித்து வந்ததால் வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு எண். 4/2016 மற்றும் மேல்முறையீட்டு எண் 28/2016 ஆகிய இரு

வழக்கிலும் கூறப்பட்டுள்ள புல எண்கள் 66 1ஏ என்பதாகும். ஆனால் இம்மனுதாரர் கிரயம் பெற்றதாக சொல்லப்படுவது 66/1 டி ஆகும். புல எண் 66/1 டி என்பது பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ மற்றும் பி ஷெடியூல்தாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனரான அப்துல் வஹாப்பிற்கு புல எண் 66-1 டி ஒதுக்கப்படவில்லை . எனவே, மனுதாரர் புதிதாக வழக்கு தாக்கல் செய்து தனக்குள்ள பரிகாரத்தை தேடிகொள்ளலாமே தவிர இவ்வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க கோரி மனுதாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் மேற்படி வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்து அந்த மனு நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரர் தனது கட்சியை வலுப்படுத்தக்கூடிய வகையில் சில முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவையான, அவசியமான ஆவணங்கள் என்றும், மேலும் அது வழக்கிலுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும், எனவே, ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்று ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. மேற்படி ஆவணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்தான். அவைகளை பொறுத்து ஆட்சேபனை எதுவும் இருக்கும் பட்சத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும்பொழுது ஆட்சேனையை தக்கமுறையில் பதிவு செய்யலாம். இந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் பெறப்பட்டு குறியீடு செய்யப்பட்டது என்பதாலேயே அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாக தீர்மானம் செய்ய இயலாது. அந்த ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து உரிய நேரத்தில் தீர்வு காணப்படும். மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பிரச்சனையோ கஷ்ட நஷ்டமோ ஏற்படாது. மாறாக, அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு ஏற்பட

உதவிகரமாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10. **முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகை இல்லை**.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 31.07.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.